Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

DHINATH DHALAM Tamil & English daily Paper

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 062 | திங்கள் Monday | 01.06.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# 5 தொகுதி இடைத்தேர்தல்: தீவிரம் காட்டும் தவெக, திமுக



2026 சட்டசபை தேர்தல் முடிந்து, புதிய ஆட்சி அமைந்த பிறகும், தமிழக அரசியலில் பதற்றமான சூழ்நிலையே நிலவி வருகிறது. எதிர்பாராத தோல்வி தி.மு.க.வையும், அ.தி.மு.க.வையும் புரட்டிப்போட்டு இருக்கிறது. தேர்தல் தோல்வியால் 2 ஆக உடைந்த அ.தி.மு.க. மீண்டும் ஒட்டிக்கொண்டாலும், அ.தி.மு.க.வில் நிலவும் உட்கட்சி பூசல் நீறுபூத்த நெருப்பாக இருக்கிறது.

அ.தி.மு.க. சார்பில் வெற்றி பெற்ற மரகதம் குமரவேல் (மதுராந்தகம்–தனி), ஜெயக்குமார் (பெருந்துறை), சத்யபாமா (தாராபுரம்–தனி), இசக்கி சுப்பையா (அம்பாசமுத்திரம்) ஆகியோர் தங்களது எம்.எல்.ஏ. பதவிகளை ராஜினாமா செய்து,த.வெ.க.வில் தங்களை இணைத்துக்கொண்ட அதிர்ச்சியில் இருந்து அ.தி.மு.க. இன்னும் மீளவில்லை.

இன்னும் யார், யார் அ.தி.மு.க.வில் இருந்து த.வெ.க. பக்கம் கடைக்கண் பார்வையை திருப்புவார்களோ என்ற சந்தேகத்திலேயே அ.தி.மு.க. தலைமை இருந்து வருகிறது. த.வெ.க.வால் தி.மு.க. தன் கூட்டணி கட்சிகளை இழந்தும், அ.தி.மு.க. தன்னையே இழந்து நிற்கும் நிலையும் அரசியல் அரங்கில் ஏற்பட்டுள்ளது.

இந்த சூழ்நிலையில் தான் விரைவில், திருச்சி கிழக்கு. அம்பாசமுத்திரம்,மதுராந்தகம்,பெருந்துறை,தாராபுரம் ஆகிய 5 சட்டசபை தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் வர உள்ளது. இதற்கான அறிவிப்பு எந்த நேரத்திலும் வெளியாகலாம். திருச்சி கிழக்கு தொகுதியை பொறுத்தவரையில் முதல்–அமைச்சர் விஜய் வெற்றி பெற்ற தொகுதி. பெரம்பூர் தொகுதியை அவர் வைத்துக்கொண்டதால் திருச்சி கிழக்கு இடைத்தேர்தலை எதிர்நோக்கி இருக்கிறது.

ஏற்கனவே த.வெ.க.வுக்கு 107 எம்.எல்.ஏ.க்கள் இருக்கும் நிலையில் இந்த 5 தொகுதிகளிலும் வென்றால், த.வெ.க.வின் பலம் 112 ஆக உயரும். விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்டு கட்சிகள்,இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளின் தடையில்லா ஆதரவு இருப்பதால் 5 ஆண்டுகளுக்கு ஆட்சியை தக்க வைத்துக் கொள்ளலாம் என்று த.வெ.க. திட்டமிட்டுள்ளது. எனவே தான், த.வெ.க. இந்த 5 தொகுதி இடைத்தேர்தலிலும் களம் காண தீவிரம் காட்டி வருகிறது.

**சந்திக்கலாமா? வேண்டாமா?**

இதற்கிடையே, 5 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்த தி.மு.க.வும் முடிவு செய்துள்ளது. கட்சியின் அடுத்தக்கட்ட நகர்வுக்கு இடைத்தேர்தலை சந்திப்பது முக்கியம் என்று தி.மு.க. கருதுகிறது. இதற்காக கட்சி நிர்வாகிகளிடம் தி.மு.க. தலைமை கருத்து கேட்டு வருகிறது.இந்த5தொகுதி இடைத்தேர்தலில் வென்றால் மட்டுமே தி.மு.க.வின் வலிமையை நிரூபிக்க முடியும் என்று தி.மு.க. கருதுகிறது. எனவே அதற்கேற்ப வேட்பாளர் தேர்வை முன்னெடுக்கவும் திட்டமிட்டு இருக்கிறது.

அ.தி.மு.க.வை பொறுத்தவரையில், தொடர் தோல்வி, உட்கட்சி பிரச்சினையால் 5 தொகுதி இடைத்தேர்தலை சந்திக்கலாமா? வேண்டாமா? என்ற குழப்பத்திலேயே இருந்து வருகிறது. மீண்டும் தோல்வி ஏற்பட்டால், கட்சியில் மீண்டும் பிளவு ஏற்பட்டு விடுமோ? என்ற அச்சமும் அ.தி.மு.க. தலைமையை யோசிக்க வைத்துள்ளது. எனவே தேர்தலில் போட்டியிடாமல் புறக்கணிக்கலாமா? என்று அ.தி.மு.க. தீவிர ஆலோசனை மேற்கொண்டுள்ளது.

நாம் தமிழர் கட்சி, பா.ஜனதா ஆகிய கட்சிகளும் இடைத்தேர்தலை எதிர்கொள்வது குறித்து யோசித்து வருகிறது. இதற்காக தங்களது கட்சியின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தை கூட்டவும் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இவ்வாறு இருக்கதமிழக அரசியல் களத்தில் விரைவில் இடைத்தேர்தல் பரபரப்பு தொடங்கிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தமிழகத்தில் நடக்கும் குதிரை பேரத்தை தடுத்து நிறுத்த கோரி ஆளுநரிடம் அதிமுக மனு



சென்னை:

"அதிமுக எம்எல்ஏக்களை விலைபேசும் தவெகவின் நடவடிக்கையை ஆளுநர் தடுத்து நிறுத்தவேண்டும் எனஅதிமுகஎம்எல்ஏஅக்ரிகிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அதிமுக எம்எல்ஏக்கள் மரகதம் குமரவேல், ஜெயக்குமார் , சத்யபாமா,இசக்கிசுப்பையா ஆகியோர் தங்களது பதவியை ராஜினாமா செய்துவிட்டு, தவெக–வில் இணைந்துவிட்டனர். இதையடுத்து அதிமுகவில் கடும் புகைச்சல் ஏற்பட்டுள்ளது. மேலும், தவெக குதிரை பேரத்தில் ஈடுபட்டுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர்கள் கடுமையாக குற்றம் சாட்டி வருகின்றனர்.

இந்நிலையில், இது குறித்து அக்ரி கிருஷ்ணமூர்த்தி செய்தியாளர்களிடம் பேசும்போது, "குதிரை பேரத்தின் மூலமாக அதிமுக எம்எல்ஏக்களை விலைபேசும் தவெகவின் நடவடிக்கையை தடுத்த நிறுத்த வேண்டும் என அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ், ஆளுநருக்கு கொடுத்த புகார் மனுவை நாங்கள் கொடுத்துள்ளோம்.

இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளோம். தலைமை செயலகத்தையே தவெக கட்சி அலுவலகமாக மாற்றி விட்டனர்" என்று கூறினார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அதிமுக அறிக்கையில், "தமிழகத்தில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற குதிரை பேரத்தை தடுத்து நிறுத்துவதற்கு, தமிழகஆளுநர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, அதிமுகபொதுச்செயலாளரும், முன்னாள் முதல்வருமான எடப்பாடி பழனிசாமி கொடுத்த மனுவினை, இன்று அதிமுக விவசாயப் பிரிவுச் செயலாளரும், திருவண்ணாமலை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டமன்றக் குழு கொறடாவும், முன்னாள் அமைச்சருமான அக்ரிகிருஷ்ணமூர்த்தி, ம.தனபால், ஆகியோர், தமிழக ஆளுநரை நேரில் சந்தித்து வழங்கினார்கள்" எனக் குறிப்பிட ப்பட்டு ள்ளது.



## கோவை கொடிசியா வளாகத்தில்

# ஜூன் 4ம்தேதி முதல் 8 ந் தேதி வரை, இன்டெக் 2026 எனும் தொழில் கண்காட்சி நடைபெற உள்ளது




கோவையில் இன்டெக் எனும் தொழில் துறை கண்காட்சி வரும் ஜூன் 4 ந்தேதி துவங்க உள்ளது..

இந்நிலையில் இது தொடர்பான செய்தியாளர்கள் சந்திப்பு, கொடிசியா தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய கொடிசியா தலைவர் கார்த்திகேயன் , மற்றும் இன்டெக் 2026 கண்காட்சி தலைவர் பொன்னுசாமி ஆகியோர் கூறுகையில்..

கோவை கொடிசியா வளாகத்தில் 21 வது சர்வதேச இயந்திர மற்றும் பொறியியல் தொழில் கண்காட்சி ஜூன் 4 ஆம்தேதி துவங்கி ஜூன் 8 ஆம்தேதி வரை 5நாட்கள் வரை நடைபெற உள்ளது.

இதில் இந்த ஆண்டு, அமெரிக்கா, ஜெர்மனி தைவான், சீனா,, மற்றும் கொரியா ஜப்பான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்து தொழில்துறை சார்ந்த வல்லுநர்கள் அரங்குகள் அமைத்து கண்காட்சியில் புதிய புதிய கண்டுபிடிப்புகளை காட்சிப்படுத்த உள்ளனர்.

இதில் மொத்தமாக சுமார் 650 க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட இருப்பதாகவும்,சுமார் 450 நிறுவனங்கள் கலந்து கொள்ள உள்ளதாகவும், இதில் பல்வேறு நாடுகள் முழுவதிலும் இருந்து சுமார் 70 ஆயிரம் பேர் கலந்து கொள்ள உள்ளதாக கூறினார்.

குறிப்பாக செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான உற்பத்தி ரோபோடிக்ஸ் மற்றும் ஆட்டோமேஷன் அளவீட்டு தொழில்நுட்பங்கள் அட்வான்ஸ் இண்டஸ்ட்ரியல் ஆட்டோமேஷன் சிஸ்டம்ஸ் ஸ்மார்ட் ஃபேக்டரி சிஸ்டம்ஸ் லேசர் கட்டிங் சிஎன்சி போன்ற நவீன தொழில் நுட்பங்கள் குறித்து தொழில்துறையினர் அறிந்து கொள்ளும் வகையில் கண்காட்சி அமைய உள்ளதாக நம்பிக்கை தெரிவித்தனர்

தொழில் முனைவோர் மற்றும் தொழில்துறை சார்ந்தவர்களுக்கு தற்போது திறன் மேம்பாடு தரம் மற்றும் பாதுகாப்பு மேம்பாட்டுக்கான அடுத்த தலைமுறை தொழில்நுட்பத் தீர்வுகள் இந்த கண்காட்சியில் காட்சிபடுத்த உள்ளதாகவும் தெரிவித்தனர்

# தேனியில் திருமண மோசடியில் ஈடுபட்டு நகைகளை அபகரித்து தப்பிச்சென்ற பெண்

## காவல் நிலையத்தில் புகார் அளித்தும் நடவடிக்கை இல்லை என பாதிக்கப்பட்ட கணவர் புகார்



தன்னை போல் இரண்டு நபர்களை திருமணம் செய்து அவர்களிடம் நகைகளை அபகரித்து தற்போது வேறு ஒருவருடன் 4வது திருமணம் செய்து கொண்டதாக பாதிக்கப்பட்ட கணவர் புகார்* தேனி அருகே மாரியம்மன் கோவில்பட்டியை சேர்ந்தவர் சன்னாசி (34) இவர் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறார் கடந்த 2024 ஆம் ஆண்டு தேனி அம்மாபுரத்தைச் சேர்ந்த தனலட்சுமி என்பவருடன் இவருக்கு திருமணம் நடைபெற்றது

இருவரும் ஒன்றாக வாழ்ந்து வந்த நிலையில் சன்னாசி பணி நிமித்தமாக வெளியூர் சென்றபோது வீட்டிலிருந்த 6 பவுன் நகையை எடுத்துக்கொண்டு தனலட்சுமி அவரது அம்மா வீட்டிற்கு சென்றதாக கூறப்படுகிறது பின் வீடு திரும்பிய சன்னாசி தன் வீட்டிலிருந்த 6 பவுன் நகை குறித்து தனது அம்மா வீட்டிற்குச் சென்ற மனைவியிடம் கேட்டபோது அதை அடமானம் வைத்துள்ளதாகவும் மீட்டுத் தருகிறேன் என கூறி காலம் தாழ்த்தி வந்துள்ளார்

மேலும் வீட்டிற்கும் வராமல் நகையும் கொடுக்காமல் தன்னை தன் மனைவி மற்றும் அவரின் தாயார் ஏமாற்றி வந்ததாகவும் இது குறித்து தன் நேரில் சென்று மனைவியிடம் கேட்க சென்ற போது தனது மனைவி கோயம்புத்தூர் சென்று விட்டதாக அவர் தாயார் கூறியதாக தெரிவித்துள்ளார்

பின்னர் விசாரித்ததில் கோயம்புத்தூரில் வேறு ஒரு நபருடன் திருமணம் செய்து கொண்டு தான் ஏமாற்றப்பட்டது தெரியவந்துள்ளது,

மேலும் தனக்கு முன்னால் இரண்டு நபர்களை திருமணம் செய்து கொண்டு அவர்களிடம் நகையை பறித்து ஏமாற்றியுள்ளதாகவும், தற்போது தன்னிடமும் நகையை ஏமாற்றி கோயம்புத்தூரைச் சேர்ந்த நபரை 4வது திருமணம் செய்து கொண்டு தன்னை ஏமாற்றி விட்டதாகவும், தன்னை போல் யாரும் ஏமாறக்கூடாது என தெரிவித்தார்

இதுகுறித்து தேனி மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் தன்னை ஏமாற்றி மோசடி செய்த தனது மனைவி மற்றும் அவர்களின் தாயார் மீது உரிய நடவடிக்கை எடுத்து தனது நகையை மீட்டு தர வேண்டும் என கோரிக்கை வைத்தார்

# “அதிமுகவில் பிரிவை ஏற்படுத்த நான் ஒருபோதும் எண்ணியதில்லை” லீமா ரோஸ் விளக்கம்



சென்னை: "அதிமுகவில் பிரிவுகள் ஏற்படுத்த நான் ஒருபோதும் எண்ணியதில்லை. என் மீது களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு சில வாடகை பேச்சாளர்களால் பரப்பப்பட்ட வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது தலைவர்களின் இணைப்பு" என அதிமுக எம்எல்ஏ லீமா ரோஸ் மார்ட்டின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'அதிமுகவின் முன்னணி தலைவர்களிடையே இருந்த கருத்து வேறுபாடுகள் களைந்து கட்சி ஒன்றுபட்டது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. சமீபகாலமாகஎன்னை வைத்து சில வாடகை பேச்சாளர்கள் எந்த வித அடிப்படை ஆதாரமும் இன்றி சொல்லிய கட்டுக்கதைகள் பொய்த்துப் போயின.

எம்.ஜி.ஆரால் உருவாக்கப்பட்டு, ஜெயலலிதாவால் செழுமைப்படுத்தப்பட்ட பேரியக்கத்தில் பிரிவுகள் ஏற்படுத்த நான் ஒருபோதும் எண்ணியதில்லை. என் மீது களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு சில வாடகை பேச்சாளர்களால் பரப்பப்பட்ட வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது இந்த இணைப்பு. பல கோடி மக்களின் நம்பிக்கையாக திகழும் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட்டு லால்குடி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டது என் வாழ்நாளின் பெரும் அங்கீகாரமாக கருதுகிறேன்.

எனது தொகுதி மக்களுக்கு நலத்திட்டங்களை வழங்கிடவும், தொகுதி வளர்ச்சிக்கு உழைப்பதுமே என்னுடைய முதன்மை கடமையாக எண்ணுகிறேன். தமிழ்நாட்டில் மீண்டும் ஜெயலலிதாவின் நல்லாட்சி மலர்ந்திட எடப்பாடி பழனிசாமி தலைமையில் அயராது பாடுபடுவோம்' எனத் தெரிவித்துள்ளார்.

## கோவை உப்பிலிபாளையத்தில்

# மாகாளியம்மன் திருக்கோயிலில் மகா கும்பாபிஷேகம் நடந்தது



கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் அமைந்துள்ள நூற்றாண்டுகள் பழமையான அருள்மிகு மாகாளியம்மன் திருக்கோயிலில் மகா கும்பாபிஷேக பெருவிழா பக்தி பரவசத்துடன் நடைபெற்றது. மகா கும்பாபிஷேக பெருவிழா

அறக்கட்டளை தலைவர் கே. சந்திரசேகரன் தலைமையிலும், செயலாளர் வழக்குரைஞர் ஜெயசந்திரன், பொருளாளர் வனவாசன், துணைத்தலைவர்கள் கோபாலகிருஷ்ணன் மற்றும் உதயகுமார் ஆகியோர் முன்னிலையிலும் விழா சிறப்பாக நடைபெற்றது.

பழமை மிக்க இந்த ஆலயத்தில் பல கட்ட திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு புதிய ராஜகோபுரம், கருவறை, கல் மண்டபம், வசந்த மண்டபம், ராஜராஜேஸ்வரி சிலை உள்ளிட்ட பல்வேறு புதிய அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் காலை 9.30 மணி முதல் 10.15 மணி வரை சுவாதி நட்சத்திர நேரத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. திருப்பேரூராதீனம் மற்றும் சிரவை ஆதீன அடிகளார்கள் தலைமையில் வேத மந்திரங்கள் முழங்க புனித நீர் கலசங்களில் இருந்து கோபுர கலசங்களுக்கு அபிஷேகம் செய்யப்பட்டது.

இதனை முன்னிட்டு கடந்த 27ஆம் தேதி முதல் யாகசாலை பூஜைகள், கணபதி ஹோமம், வாஸ்து சாந்தி, மகாலட்சுமி ஹோமம், நவக்கிரக ஹோமம் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு யாகங்கள் நடைபெற்றன. தொடர்ந்து தினமும் பக்தர்களுக்காக அன்னதானமும் வழங்கப்பட்டது.

இவ்விழாவின் ஒரு பகுதியாக நடைபெற்ற பவளக்கொடி கும்மி ஆட்டம், ஒயிலாட்டம் உள்ளிட்ட தமிழர் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் பக்தர்கள் மற்றும் பொதுமக்களை வெகுவாக கவர்ந்தன.

இந்த மகா கும்பாபிஷேக பெருவிழாவில் அன்னதானக் குழு பொறுப்பாளர்கள் தனலட்சுமி மோகன் சுந்தர், ஜெபராஜ் (அண்ணாச்சி) விழாக்குழுவினர், கௌரவ ஆலோசகர்கள், சிவராம நாயக்கர் குட்டியம்மாள் வாரிசுகள் குடும்பத்தார், சஷ்டிக் குடும்பத்தார், சிவானி குடும்பத்தார், கோயில் பூசாரிகள், கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மன் அருளைப்பெற்றனர்.

## நேட்டிவ் மெடிக்கேர் அறக்கட்டளை சார்பாக, 19வது ஆண்டு ரோஜாக்கூட்டம் விழா

# 2029 எனும் தலைப்பில் மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் கல்வி நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நிகழ்ச்சி நடைபெற்றது




கோவை இராம் நகர் பகுதியில் உள்ள ஸ்ரீ ஐயப்பன் பூஜா சங்க மண்டப அரங்கில், நேட்டிவ் மெடிகேர் சாரிட்டபிள் டிரஸ்ட் அமைப்பு, தனது 19வது ரோஜாக்கூட்டம் தினம் விழா 2026, எனும் தலைப்பில் கல்வி நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவினை நடத்தியது. இந்த விழாவில் 1,000-க்கும் மேற்பட்ட குழந்தைகள், பெற்றோர்கள், தன்னார்வலர்கள், கல்விகொடையாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

கடந்த 18 ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெறும் இந்த ரோஜாக்கூட்டம் எனும் திட்டம், நேட்டிவ் மெடிக்கேர் அறக்கட்டளையின் முதன்மை திட்டமாக விளங்கி வருகிறது. இந்த திட்டத்தின் மூலம் ஏழை எளிய மாணவர்களுக்கு கல்விப் உபகரணங்கள் உதவித்தொகை மற்றும் உயர்கல்விக்கான ஆதரவும் வழங்கப்பட்டது. இந்த ஆண்டு சுமார், 1000 த்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் நேரடியாக பயனடைந்தனர். மேலும் தமிழ்நாடு அரசு பொதுத்தேர்வில் 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பில் முதலிடம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடம் பெற்ற அரசு பள்ளி மாணவர்களுக்கு சிறப்பு நலதிட்ட உதவிகள் வழங்கபட்டது. இந்த நிகழ்ச்சியினை,

நேட்டிவ் மெடிக்கேர் நிறுவனத்தின் நிறுவனரும், நிர்வாக அறங்காவலருமான ஏ.எஸ் சங்கரநாராயணன், குத்துவிளக்கேற்றி துவக்கிவைத்தார். விழாவின் தலைமை விருந்தினராக கோவை மாவட்ட பயிற்சி துணை ஆட்சியர் திருமதி. ஹரிப்பிரியா கலந்துகொண்டு, நேட்டிவ் மெடிக்கேர் அறக்கட்டளையின் தொடர் சேவையை பாராட்டி மாணவர்களை ஊக்கப்படுத்தினார். தொடர்ந்து ஸ்டேட் ஸ்ட்ரீட் அமைப்பின் துணைத் தலைவர், சுதர்சன், நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, சிறப்புரையாற்றி, மாணவ மாணவியர்களின் கல்வி இடைவெளியை குறைக்கும் இந்த திட்டத்தின் முயற்சிகளை பாராட்டினார். பல நிறுவனங்களின் கார்ப்பரேட் தலைவர்கள், தன்னார்வலர்கள், லையன்ஸ் இன்டர்நேஷனல், ரோட்டரி இன்டர்நேஷனல், கல்வி நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், என பலரும் கலந்து கொண்டனர். இறுதியாக நேட்டிவ் மெடிக்கேர் அறக்கட்டளையின் தலைமை நிர்வாகஅதிகாரி பிரபுசங்கர், நன்றியுரை நிகழ்த்தி நிறைவு செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கேரளாவில் சிக்கிய ஜெலட்டின் வெடிபொருள்: திருச்சி, விருதுநகரில் என்ஐஏ சோதனை



திருச்சி: கேரளாவில் கிடைத்த ஜெலட்டின் உள்ளிட்ட வெடிப்பொருட்களை தயாரித்த திருச்சி வெடிமருந்து தொழிற்சாலை உள்ளிட்ட இடங்களில் கொச்சினை சேர்ந்த என்ஐஏ அதிகாரிகள் தீவிர விசாரணை மேற்கொண்டனர்.

கேரளா மாநிலம் மலப்புரத்தில் கடந்த பிப்ரவரி மாதம் ஒரு லாரி நிறைய வெடி மருந்துகள் சிக்கின. அந்த லாரியில் இருந்த வெடி மருந்துகளை கைப்பற்றி கொச்சினை சேர்ந்த தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ) அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

அந்த விசாரணையில், அவை தமிழகத்தில் திருச்சி, விருதுநகர், கர்நாடக மாநிலத்தில் மிசாப்பூர் ஆகிய இடங்களில் உள்ள 3 வெடி மருந்து நிறுவனங்களில் தயாரிக்கப்பட்ட வெடி மருந்துகள் என்பதை கண்டறியப்பட்டது.

திருச்சி மாவட்டம் துறையூர் அருகே முருங்கப்பட்டியில் செயல்பட்டு வரும் வெற்றிவேல் எக்ஸ்ப்ளோசிவ் எனப்படும் தொழிற்சாலையில் கல்குவாரிகள் மற்றும் கிணறுகள் தோண்ட பயன்படுத்தப்படும் ஜெலட்டின் குச்சிகள் உள்ளிட்ட வெடிப்பொருட்கள் தயாரிக்கப்படுகிறது. இந்த தொழிற்சாலைக்கு கொச்சினை சேர்ந்த 5 என்ஐஏ அதிகாரிகள் காலை 6 மணிக்கு வருகை தந்தனர்.

தொழிற்சாலைக்குள் சென்ற அதிகாரிகள் வெடி மருந்துகள் தயாரிப்பு, விநியோகம் குறித்த பதிவேடுகளை தொடர்ந்து ஆய்வு செய்தனர். இவர்களின் பாதுகாப்புக்காக தமிழ்நாடு சிறப்பு அதிரடி காவல் படையினர் ஒரு பேருந்தில் வந்திருந்தனர். தொழிற்சாலையை சுற்றி அவர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

சோதனை காரணமாக, பத்திரிக்கையாளர்கள் உட்பட வெளியாட்களை தொழிற்சாலை செயல்படும் பகுதிக்குள் போலீஸார் அனுமதிக்கவில்லை. கடந்த 2016-ம் ஆண்டு இந்த தொழிற்சாலையில் ஏற்பட்ட பயங்கர வெடிவிபத்தில் பணியில் இருந்த 20-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உடல் சிதறி பலியானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோல, தமிழகத்தில் விருதுநகரில் உள்ள ஒரு வெடிமருந்து தொழிற்சாலை, கர்நாடக மாநிலம் மிசாப்பூரில் உள்ள வெடிமருந்து தொழிற்சாலை என மொத்தம் 3 தொழிற்சாலைகளிலும், ஜெலட்டின் உள்ளிட்ட வெடிப்பொருட்கள் சட்டவிரோதமாக விநியோகம் செய்யப்பட்டது குறித்து கொச்சினை சேர்ந்த என்ஐஏ அதிகாரிகள் ஒரேநேரத்தில் தீவிர சோதனை மற்றும் விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.

முன்னதாக, விசாரணையில் பறிமுதல் செய்யப்பட்ட டெட்டனேட்டர்கள் விருதுநகர் மாவட்டம் நரிக்குடி அருகே உள்ள அகத்தாகுளத்தில் சேலம் ஸ்ரீரெங்கபாளையத்தைச் சேர்ந்த சந்தோஷ்சிவன் என்பவருக்குச் சொந்தமான வெடிமருந்து ஆலையில் தயாரிக்கப்பட்டது தெரியவந்தது.

மேலும்,2028-ம்ஆண்டு வரை இந்த ஆலைக்கு உரிமம் உள்ளதும், ஆண்டுக்கு சுமார் 4.50 கோடி எண்ணிக்கையிலான டெட்டனேட்டர்களை தயாரிக்க முடியும் என்பதும், நைட்ரேட் உள்ளிட்ட வெடி பொருள்களை ஆண்டுக்கு சுமார 3 ஆயிரம் மெட்ரிக் டன் வரை உற்பத்தி செய்ய முடியும் திறன் கொண்டது என்பதும் தெரியவந்தது.

அதோடு, அகத்தாகுளத்திலிருந்து தமிழகம், கேரளா, ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களுக்கு டெட்டனேட்டர்கள் அனுப்பிவைக்கப்பட்டது தெரியவந்தது. அதையடுத்து, அகத்தாகுளத்தில் உள்ள வெடிமருந்து ஆலை மற்றும் குடோனில் கேரளாவைச் சேர்ந்த தேசிய புலனய்வு முகமையின் 5 பேர் கொண்ட குழுவினர் இன்று காலை முதல் தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டனர்.

# ஆப்ரேஷன் சிந்தூர் 2.0க்கு முப்படைகளும் தயார் தலைமை தளபதி உபேந்திர திவேதி தகவல்



மகாராஷ்டிரா மாநிலம், புனேவில் உள்ள தேசிய பாதுகாப்பு அகாடமியில் (National Defence Academy) இன்று (மே 30) 150- வது பயிற்சிப் பிரிவின் அணிவகுப்பு நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக இந்திய ராணுவத்தின் தலைமை தளபதி உபேந்திரதிவேதி கலந்து கொண்டார். பயிற்சியை முடித்து பணிக்கு திரும்பவுள்ள வீரர்களின் சாகசங்கள் மற்றும் அணிவகுப்புகளையும் அவர் பார்வையிட்டார்.

பின்னர்செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அவர், "இந்திய முப்படைகளின் ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதிலும், எதிர்க்கால போருக்கு தயாராகும் வகையில் கவனம் செலுத்தி வருகிறோம். ஆப்ரேஷன் சிந்தூர் இன்னும் தொடர்கிறது. தற்காலிகமாக போர் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. ஆப்ரேஷன் சிந்தூர் 2.0 நடவடிக்கைக்கு இந்திய முப்படைகளும் நன்கு தயாராக உள்ளன.

எதிரணியினருக்கு ஒவ்வொரு அசைவும் தெரியும் அளவுக்கு வெளிப்படையானது போர்க்களம். எனவே, நமது படையினரையும் எல்லைப் பகுதிகளில் உள்ள பொதுமக்களையும்பாதுகாக்கத்தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள், படைகளை நிலைநிறுத்துதல் ஆகியவற்றில் நாம் மிகஎச்சரிக்கையாக இருக்க வேண்டும். வெற்றி என்பது மக்கள் நம்பிக்கையையும், தேசிய ஒற்றுமையையும் சார்ந்தது.

அனைவரையும் நம்பும் தேசம் போரில் எப்போதும் வெற்றி பெறும் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். படைப்பிரிவுகளாக மாற்றும் செயல்முறை திட்டமிட்டபடி முன்னேறி வருகிறது. இது குறித்த விரிவான அறிக்கை ஏற்கனவே மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சகத்திடம் வழங்கப்பட்டுள்ளது. முப்படைகளின் முக்கிய நலன்கள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படுவதை முப்படைகளின் தலைமைதளபதி மற்றும் ராணுவப்படை,விமானப் படை, கப்பற்படை ஆகிய மூன்று படைகளின் தலைமைத் தளபதிகளும் ஒரு தெளிவான நிலைப்பாட்டை எடுத்துள்ளோம்" என்றார்.

மேலும் தேசிய பாதுகாப்பு அகாடமியில் பயின்ற நாட்களை நினைவுக் கூர்ந்த இந்திய ராணுவத்தின் தலைமை தளபதி, இந்த அகாடமியில் பயிலும் மாணவர்களிடம் உள்ள தன்னம்பிக்கை வரும் தலைமுறை நம்மைவிட ஒருபடி மேலே செல்லும் என்றமனநிறைவைதருவது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது எனத் தெரிவித்துள்ளார்.



# புதிதாக விண்ணப்பித்தவர்களுக்கு ரேசன் அட்டை எப்போது? அமைச்சர் வெங்கடரமணன் விளக்கம்

சென்னை: புதிய குடும்ப அட்டைக் கோரியவர்களின் விண்ணப்பங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருவதாக உணவுத்துறை அமைச்சர் வெங்கடரமணன் தெரிவித்துள்ளார்.

சென்னை காமராஜர் சாலையில் பிரம்மகுமாரிகள் இயக்கம் சார்பில் உலகப் புகையிலை ஒழிப்பு தின விழிப்புணர்வு பேரணி இன்று (மே 30) நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட உணவுத் துறை அமைச்சர் வெங்கடரமணன் பேரணியைத் தொடங்கி வைத்தார். அத்துடன், பேரணியில் கலந்து கொண்டவர்கள் புகையிலைப் பொருட்களுக்கு எதிரான உறுதிமொழியும் எடுத்துக் கொண்டனர்.

பின்னர்செய்தியாளர்களைச்சந்தித்தஅமைச்சர் வெங்கடரமணன், "போதைப்பொருட்களுக்கு எதிராக தொடர்ந்து பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மக்களுடன் பயணிக்கும் ஆட்சியாக தவெக அரசு உள்ளது. நியாயவிலைக் கடைகளில் பணிபுரிந்து வரும் ஊழியர்களின் கோரிக்கைகளையும் மனுவாகப் பெற்றுள்ளோம். எங்கெல்லாம் நியாயவிலைக் கடைகளில் ஊழியர்கள் பற்றாக்குறை இருக்கிறதோ, முதலமைச்சர் கவனத்திற்கு கொண்டு சென்று ஊழியர்களை நியமிக்க தேவையான நடவடிக்கைகளை எடுப்போம்.

புதிதாக குடும்ப அட்டைக் கோரியவர்களின் விண்ணப்பங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. ஒரு மாதத்தில் குடும்ப அட்டைகளைக் கொடுப்பதற்கான பணிகளைத் துரிதப்படுத்தி இருக்கிறோம். முதியவர்களுக்கு வீடு தேடி சென்று ரேசன் பொருட்களை அளிக்கும் திட்டம் முறையாக செயல்படுத்தப்படவில்லை என்பது குறித்து எவ்வித புகார்களும் பெறப்படவில்லை. புகார்கள் அளித்தால் நடவடிக்கை எடுக்கப்படும். அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் மக்களோடு மக்களாகவே உள்ளோம். எங்களை சந்திப்பது எளிமையானதே.

விவசாயிகளிடம் இருந்து தேங்காய், ராகி உள்ளிட்டப் பொருட்களைக் கொள்முதல் செய்து பொதுமக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுப்பது குறித்து கோரிக்கைகள் வந்துள்ளன. முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும். ரேசன் பொருட்கள் பதுக்கல் இருந்தால் அது குறித்து தகவல் அளித்தால் நடவடிக்கை எடுக்கப்படும். வீட்டு உபயோக தண்ணீர் கேன்களின் தூய்மையின்மை,முறையானபராமரிப்பு இல்லாமல் இருப்பது உள்ளிட்டவை குறித்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்" என தெரிவித்துள்ளார்.

இதனிடையே, சென்னை ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வண்ணாரப்பேட்டைபகுதியில்உள்ள நியாயவிலைக்கடையில் அரிசி உள்ளிட்ட அத்யாவசிய உணவுப் பொருட்களின் தரம் மற்றும் இருப்பு குறித்து அமைச்சர்கள் வெங்கடரமணன், மரியவில்சன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது, பொதுமக்களுக்கு உணவுப் பொருட்களை உரிய தரம், எடையுடன் வழங்க வேண்டும் என்றும், உப்பு, சோப்பு உள்ளிட்ட இதரப் பொருட்களை வாங்க மக்களை நிர்பந்திக்கக் கூடாது என்றும் பணியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் நியாயவிலைக் கடைக்கு உள்ளேயும், அதன் சுற்றுப்பகுதிகளையும் சுத்தமாகப் பராமரிக்க வேண்டும் என்றும் அமைச்சர்கள் அறிவுறுத்தினர்.

# இந்திய மாம்பழங்களை இறக்குமதி செய்ய ஜப்பான் திடீர் தடை தமிழக விவசாயிகளுக்கு பாதிப்பு



கிருஷ்ணகிரி: இந்திய மாம்பழங்களை இறக்குமதி செய்ய ஜப்பான் திடீர் தடை விதித்துள்ளதால், மா விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக வேதனை தெரிவித்துள்ளனர்.

தமிழகத்திலேயே, மா விவசாயத்தில் கிருஷ்ணகிரி மாவட்டம் முதன்மை இடத்தில் உள்ளது. சுவை மிகுந்த ரகங்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிகளவில் விளைவி க்கப்படுகின்றன. இங்கிருந்து மாம்பழங்கள், மாங்கூழாகத் தயாரிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதேபோல் அல்போன்சா,பங்கனப்பள்ளி உள்ளிட்ட சில மாம்பழ ரகங்கள் தமிழகத்தில் இருந்து அதிகளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இதனிடையே, இந்திய மாம்பழங்களை இறக்குமதி செய்ய ஜப்பான் நாட்டு அரசு திடீரெனத் தடை விதித்துள்ளது. தற்போது மாம்பழ சீசன் காலம் என்பதால்,ஏற்றுமதி பாதிக்கப்பட்டால் விவசாயிகளுக்குப் பெரிய அளவில் இழப்பு ஏற்படும் என வேதனை தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக, தமிழகவிவசாயிகள் சங்கத்தின் மாநிலத் தலைவர் ராமகவுண்டர் கூறும்போது, மாவட்டத்தில் இருந்து ஆண்டுக்கு 1 லட்சம் டன் அளவிலான மாம்பழ வகைகள் ஜப்பான், ஆஸ்திரேலியா, சவுதி மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. இதில், ஜப்பானுக்கு அனுப்பப்படும் பழங்கள் அனைத்தும் 'வேப்பர் ஹீட் ட்ரீட்மென்ட்' எனப்படும் ஆவி வெப்பச் சிகிச்சை மூலம் சுத்தப்படு த்தப்பட்டு அனுப்பி வைக்கப்படுகின்றன. இந்நிலையில், இந்தியாவில் இருந்து மாம்பழங்கள் ஏற்றுமதி செய்யும் ஆலைகள் சிலவற்றில் தங்களது சுகாதார விதிமுறைகள் பின்பற்ற ப்படவில்லை எனக் கூறி, மாம்பழங்கள் இறக்குமதிக்கு ஜப்பான் நாடு திடீரென தடை விதித்துள்ளது அதிர்ச்சி அளிக்கிறது. மாம்பழ சீசன் காலம் என்பதால், தமிழக மா விவசாயிகளுக்குப் பெரிய அளவில் வருவாய் இழப்பு ஏற்படும்.

மாம்பழத்திற்கு உரிய விலை கிடைக்காமல் விவசாயிகள் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளாகி உள்ள நிலையில், ஜப்பான் நாட்டின் இறக்குமதித் தடை என்பது எங்களுக்கு மேலும் சுமையைத் தருகிறது.

ஜப்பானைத் தொடர்ந்து, ஒவ்வொரு நாடாக இறக்குமதித் தடை விதிக்கும் முன்பு, மத்திய அரசு உடனடியாக தலையிட்டு தீர்வு காண வேண்டும்.

சுகாதாரக் குறைபாடுள்ள ஆலைகளுக்கு மத்திய அரசு சீல் வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பாக தமிழக அரசும், மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும், என்றார்.

# 'இந்தியா சக்தி வாய்ந்தது, ராணுவத்தை நவீனமாக்கி வருகிறது' அமெரிக்கா புகழாரம்



சிங்கப்பூர்: இந்தியா சக்தி வாய்ந்தது என்றும், தனது ராணுவத்தை உயர் தர நடவடிக்கைகளுக்கு ஏற்ப நவீனமயமாக்கி வருவதாகவும் அமெரிக்காவின் போர் துறை செயலர் பீட் ஹெக்ஸெத் தெரிவித்துள்ளார்.

புவிசார் பாதுகாப்பு தொடர்பான ஷாங்க்ரி-லா உரையாடல் நிகழ்ச்சி சிங்கப்பூரில் நடைபெற்றது. இதில் இந்தாண்டு சுமார் 44 நாடுகளில் இருந்து முக்கிய தலைவர்கள் கலந்து கொண்டனர். அந்த வகையில், அமெரிக்காவின் போர் துறை செயலர் பீட் ஹெக்ஸெத் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அப்போது அவர், "இந்தியா சக்தி வாய்ந்த நாடு. தனது ராணுவ பலத்தை தொடர்ந்து நவீனப்படுத்தி வருகிறது. இந்தியப் பெருங்கடலில் தனது பலத்தை சமநிலையில் வைத்துள்ள இந்தியா, அதற்கான உட்கட்டமைப்பு தயாரிப்பு மற்றும் போக்குவரத்து தேவையை நிவர்த்தி செய்வதன் மூலம் தொடர்ந்து ராணுவத்தை நவீனப்படுத்தி வருகிறது" என்றார்.

ராணுவ திறன்களை மேம்படுத்துவதற்காக இந்தியாவுடன் இணைந்து செயல்பட அமெரிக்கா உறுதியுடன் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இதன் மூலம் பாதுகாப்பு சார்ந்த விவகாரத்தில் இந்தியாவுடன், அமெரிக்காவின் உறுதியாக உள்ளது என்பதை அவர் மீண்டும் உறுதிப்படுத்தினார்.

தொடர்ந்து, அமெரிக்கா தனது பாதுகாப்பில் தேசிய உற்பத்தி மற்றும் உலகமயமாக்கலை மேற்கொண்டு வருவதாக தெரிவித்த அவர், ஜப்பான், தென்கொரியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுடான பாதுகாப்பு தொடர்பாக அமெரிக்காவின் உறவை பற்றியும் எடுத்துரைத்தார்.

ஆசிய - பசிபிக் பகுதி உலகின் மிக முக்கியமானபிராந்தியம் என்றும், அப்பிராந்தியத்தின் பாதுகாப்பு சமமற்ற அளவில் உள்ளதாக குறிப்பிட்ட அவர், அமெரிக்கவின் ராணுவ பலத்தையை ஆசிய நாடுகள் சார்ந்திருப்பதாக தெரிவித்தார். மேலும், ஆசிய நாடுகள் தங்கள் சொந்த பாதுகாப்பில் தீவிரமாக முதலீடு செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

ஆசிய கண்டத்தில் முக்கியராணுவபலமும், நவீன தொழில்நுட்பமும் கொண்ட சீனா குறித்து பேசுகையில், அமெரிக்கா மற்றும் சீனா இடையேயான உறவு சிறப்பாக உள்ளதகாவும், சீனா உட்பட எந்தவொரு நாடும் மேலாதிக்கத்தைத் திணிக்கவோ, அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளின் பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கவோ முடியாது என்றும் சுட்டிக்காட்டினார்.

உலகளவில் இருக்கும் எரிப்பொருள் தட்டுப்பாடு,மேற்கு ஆசிய போர், இந்தோ-பசிபிக் பிராந்திய உறவில் அமெரிக்காவின் பங்கு ஆகியவற்றுக்கு மத்தியில் அமெரிக்காவின் நிலைபாட்டை பீட் ஹெக்ஸெத் வெளிப்படுத்தியுள்ளார். சமீபத்தில் இந்தியாவிற்கு வருகை தந்த அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ, பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேசினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க ட்ரோனை உள்நாட்டு ஆயுதம் மூலம் வீழ்த்தியதாக ஈரான் பெருமிதம்



டெஹ்ரான்: ஈரானின் ராணுவ இலக்குகளை குறி வைத்து அமெரிக்கா சில நாட்களுக்கு முன்பு தாக்குதல் நடத்தியது. இந்நிலையில் ஹார்முஸ் ஜலசந்தியில் உள்ள கெஷ்ம் தீவு அருகே அமெரிக்காவின் எம்.க்யூ-9 ரீப்பர் ரக ட்ரோனை, உள்நாட்டில் உருவாக்கப்பட்ட 'ஆராஷ் -இ-கமன் கீர்' என்ற வான் பாதுகாப்பு ஏவுகணை மூலம் சுட்டு வீழ்த்தியதாக ஈரான் தெரிவித்துள்ளது.

அமெரிக்க ட்ரோனின் மதிப்பு 30 மில்லியன் டாலர் என கூறப்படுகிறது. அவற்றை ரேடார்களின் உதவியில்லாமல், குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட வான் பாதுகாப்பு ஏவுகணை மூலம் சுட்டு வீழத்தியதாக ஈரான் கூறியுள்ளது. பாரசீக புராண நாயகன் ஆராஷ் பெயர் இந்த புதிய வான் பாதுகாப்பு ஏவுகணைக்கு சூட்டப்பட்டுள்ளது. இதை பெருமைப்படுத்தும் வகையில், டெஹ்ரானில், புகழ்பெற்ற பாரசீக வில் வீரன் ஆராஷின் உருவம் தாங்கிய விளம்பரப் பலகை பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளது.

# பெற்றோரிடம் வசூலிக்கும் ஒவ்வொரு பைசாவிலும் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும்; தனியார் பள்ளிகளுக்கு அதிரடி உத்தரவு



சென்னை: தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தனியார் பள்ளிகளும், அரசு நிர்ணயித்த கல்விக் கட்டண விவரங்களை பொதுமக்களின் பார்வைக்கு விளம்பர பலகைகளிலும், இணையதளங்களிலும் கட்டாயமாக வெளியிட வேண்டும் என்று தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம் அதிரடியாக உத்தரவிட்டுள்ளது.

கோடை விடுமுறை முடிந்து ஜூன் 4ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்பட உள்ள நிலையில், இந்த முக்கிய உத்தரவு வெளியாகியுள்ளது.

கோவை சேரன் நகரை சேர்ந்தவர் லியாகத்அலி. இவர் 2022 அக்டோபரில், தனியார் மெட்ரிக் பள்ளிகளில் அரசு வழிகாட்டுதலின் படி நிர்ணயிக்கப்பட்ட கட்டணவிவரங்கள் குறித்து, தகவல் கேட்டு விண்ணப்பித்திருந்தார்.

அவரது மனுவை, அதிகாரிகள் முறையாக கையாண்டு தகவல் வழங்காமல், ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு மாற்றி மாற்றி அனுப்பி உள்ளனர். இதனால், மனுதாரர் மேல்முறையீடு செய்தார். அந்த மனு, மாநில தகவல் ஆணையர் இளம்பரிதி முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர் கோரிய முழுமையான தகவல்களை தயாரித்து, இரு வார காலத்திற்குள், கட்டணமின்றி விரைவு தபால் மூலம் கோயம்புத்தூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் வழங்க வேண்டும் என உத்தரவிடப்பட்டது.

மேலும், பெற்றோர்கள் தங்களின் பொருளாதாரத் திறனை மீறி கல்விக்காகப் பணம் செலுத்துவதால், அவர்கள் செலுத்தும் ஒவ்வொரு பைசாவிற்கும் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும் என்று மாநில தகவல் ஆணையம் சுட்டிக்காட்டியுள்ளது.

மெட்ரிக், சி.பி.எஸ்.இ மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் தங்களின் வகுப்புவாரியான கல்விக் கட்டண விவரங்களை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். நுழைவாயிலில் உள்ள விளம்பரப் பலகை, பள்ளியின் அதிகாரப்பூர்வ இணையதளம் மற்றும் மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பப் படிவங்கள் ஆகியவற்றில் கட்டண விவரங்களை அச்சடிக்க வேண்டும்.

அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களும் ஆய்வு செய்து, உறுதிப்படுத்திய விவர அறிக்கையை, வரும் ஜூன் 15-ம்தேதி ஆணையத்தில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும்,இந்த அறிக்கையை ஜூன் 16-ம் தேதி தனியார் பள்ளிகளின் இயக்குநர் நேரில் வந்துசமர்ப்பிக்கவேண்டும் எனவும் மாநில தகவல் ஆணையர் இளம்பரிதி உத்தரவிட்டார்.

தமிழ்நாட்டில் கோடை விடுமுறை முடிந்து ஜூன் 4-ம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் நிலையில், மாநில தகவல் ஆணையத்தின் இந்த உத்தரவு பெற்றோர்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளது.



## ஈரோடு மாவட்டம் கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட வணிக வளாகங்களைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்

தமிழ்நாடு கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி ஈரோடு மாநகராட்சி, கனி மார்க்கெட், ஆர்.கே.வி.ரோடு மற்றும் காளை மாட்டு சிலை அருகில் உள்ள வணிக வளாகங்களை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் அவர்கள் ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட வணிக வளாகங்களில் ஆய்வு மேற்கொண்டு, அங்கு செயல்பட்டு வரும் கடைகள் எண்ணிக்கை மற்றும் காலியாக உள்ள கடைகளின் விவரம், வாடிக்கையாளர் வருகை தினசரி / வாராந்திர மக்கள் வருகை, வாடகை மற்றும் விற்பனை நிலவரம் குறித்தும் கேட்டறிந்தார். மேலும், சிசிடிவி, தீயணைப்பு வசதி, குடிநீர், பார்க்கிங், கழிப்பறை, போன்ற வசதிகள் அமைக்கப்பட்டு இருப்பதையும் பார்வையிட்டார். வணிக வளாகத்தில் உள்ள வாடகைக்கு விடப்படாத கடைகளை உரிய முறையில் ஏலம் விடப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், மேலும், உள்ள ஆக்கிரமிப்புக்களை அகற்றவும், பொதுமக்களுக்கு வளாகத்தினை இடையூறாக தூய்மையாகவும், அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். சுகாதார மாகவும் வைத்திருக்கும் படி

இந்த ஆய்வின் போது, ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் த

கா.க.ஆனந்த் மோகன், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் , உதவி ஆணையர் லதா, உதவி பொறியாளர் சோமசுந்தரம் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



ஈரோடு மாவட்டம் ஆணைக்கல்பாளையம் பகுதியில் மாவட்ட ஆயுதப்படை பயிற்சி வளாகத்தில் (மே.30) அன்று ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் சுருதி உத்தரவின்படி, காவலர்களுக்கான கண் மற்றும் உடல் பரிசோதனை மருத்துவ முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் மாவட்ட காவல்துறையினர் கலந்து கொண்டு பரிசோதனை செய்து கொண்டனர்.

## மீண்டும் திறக்கப்பட்ட பழைய குற்றாலம் குளிப்பதற்கு கட்டணம் இல்லை



கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புப் பணிகளுக்காக மூடப்பட்ட இந்த அருவி, சுமார் 8 மாதங்களுக்குப் பிறகு மீண்டும் திறக்கப்பட்டுள்ளதால் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தென்காசி மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல் கிஷோர், மாவட்ட வன அலுவலர் ஆர். ராஜ்மோகன் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன் ஆகியோர் உள்ளாட்சி மற்றும் வனத்துறை அதிகாரிகளுடன் இணைந்து நேற்று பழைய குற்றாலம் அருவிப் பகுதியில் விரிவான ஆய்வு மேற்கொண்டனர். அதனைத் தொடர்ந்து, அருவியை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தனர்.

பழைய குற்றாலம் பகுதி பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் அமைந்துள்ளதால் சமீபத்தில் வனத்துறை தனது கட்டுப்பாட்டின்கீழ்பழைய குற்றாலம் அருவியை கொண்டு வந்தது. மேலும் அருவியில் குளிப்பதற்கு பல ஆண்டுகளாக பொதுமக்கள் இலவசமாக சென்று வந்த நிலையில், திடீரென குளிப்பதற்கு நபர் ஒருவருக்குஇருபதுரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும் என வனத்துறை உத்தரவிட்டிருந்தது.

இதற்கு பல்வேறு தரப்பினரும் கடும் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், குளிப்பதற்குவிதிக்கப்பட்ட 20 ரூபாய் கட்டணத்தை ரத்து செய்து மாவட்ட ஆட்சியர் அதிரடியாக உத்தரவிட்டுள்ளார். அதே சமயம் எதிர்காலத்தில் தமிழ்நாடு சூழல் சுற்றுலா வழிகாட்டுதல்களின்படி நுழைவு கட்டணம் வசூலிப்பது குறித்து அரசு முடிவெடுக்கும்.

அதுவரை, தற்போது தற்காலிகமாக பொதுமக்களிடம் எந்தவித நுழைவு கட்டணமும் வசூலிக்கப்படாது என வனத்துறை தெளிவுபடுத்தியுள்ளது. இதனிடையே பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு, காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை மட்டுமே சுற்றுலாப் பயணிகள் அருவிப் பகுதிக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் உயர்நீதிமன்ற உத்தரவுகளைப் பின்பற்றி அருவிப் பகுதியில் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

மேலும் அருவிப் பகுதியில் பிளாஸ்டிக் பொருட்களுக்கு முற்றிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது. குளிக்கும் போது சோப்பு, ஷாம்பு, எண்ணெய் உள்ளிட்ட பொருட்களைப் பயன்படுத்தக் கூடாது, தீப்பற்றக்கூடிய பொருட்கள், மதுபானங்களை வனப்பகுதிக்குள் கொண்டு வர முற்றிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பிற்காக காவல் துறை, தீயணைப்புத் துறை மற்றும் மருத்துவக் குழுவினர் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளனர். குடிநீர், கழிவறை மற்றும் உடை மாற்றும் அறைகள் சீரமைக்கப்பட்டு செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும், இப்பகுதியில் இயங்கும் ஆட்டோக்களின் கட்டணமும், பயணிகள் எண்ணிக்கையும் முறைப்படுத்தப்படும் என்றும், விதிகளை மீறினால் அபராதம் விதிக்கப்படும் என்றும் மாவட்ட நிர்வாகம் எச்சரித்துள்ளது.

## சிறுமிக்கு பாலியல் கொடுமை: தொழிலாளிக்கு 61 ஆண்டுகள் சிறைத் தண்டனை



சிவகங்கை: சிவகங்கை பகுதியை சேர்ந்த கூலித் தொழிலாளி கருப்பசாமி (26), 2022-ம் ஆண்டு 17 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்தார்.

இதில் அவர் கர்ப்பமானார். இதுகுறித்து சிவகங்கை அனைத்து மகளிர் போலீஸார் வழக்குப் பதிந்து கருப்பசாமியை கைது செய்தனர்.

இது தொடர்பான வழக்கு சிவகங்கை போக்சோ விரைவு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இந்த வழக்கை நீதிபதி ரோகிணி விசாரித்தார். அரசு தரப்பில் வழக்கறிஞர் தனலட்சுமி ஆஜராகி வாதாடினார். இதில் கருப்பசாமிக்கு 61 ஆண்டு சிறை, ரூ.4,000 அபராதம் விதித்தும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு தமிழக அரசு ரூ.5 லட்சம் இழப்பீடு வழங்கவும் நீதிபதி உத்தரவிட்டார்.

## ஈரோடு மாவட்டத்தில் அமைச்சர்கள் கே.ஏ.செங்கோட்டையன் மற்றும் ம.விஜய் பாலாஜி ஆகியோர் தலைமையில் அனைத்து அரசுத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது

வருவாய்த்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் மற்றும் கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி ஆகியோர் தலைமையில் (30.05.2026) அன்று



அனைத்து அரசுத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், வருவாய்த்துறை அமைச்சர் மற்றும் கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆகியோர் ஈரோடு மாவட்டத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள்.

நகராட்சி நிர்வாகத்துறையின் சார்பில் கூட்டு குடிநீர் திட்டத்தின் பழைய சிமெண்ட் குழாய்களுக்கு பதிலாக புதிய குழாய்கள் மாற்றுதல், சோலார் பேருந்து நிலையத்தில் தனியார் பேருந்துகளை இயக்க அனுமதித்தல், கனிராவுத்தர் குளம் புதிய பேருந்து நிலமெடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல், கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் தொடர்பாகவும், புதிய நகராட்சி அலுவலக கட்டிடம் அமைத்தல், தூய்மை பாரத திட்டத்தின் கீழ் (2.0) கழிவுநீர் சுத்திரிகரிப்பு நிலையம் அமைத்தல் தொடர்பாகவும், நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் கோபிசெட்டிபாளையம் புறவழிச்சாலை அமைத்தல் தொடர்பாகவும், தொழில்துறையின் சார்பில் சிறு தகவல் தொழில்நுட்ப பூங்கா அமைத்தல் தொடர்பாகவும், எரிசக்தித்துறையின் சார்பில் துணை மின் நிலையம் அமைத்தல் தொடர்பாகவும், ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வள மேலாண்மைத்துறையின் சார்பில் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் கூட்டு குடிநீர் திட்டம் அமைத்தல், கிராமங்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்தி தருதல், சாலை வசதி அமைப்பது, சேதமான சாலைகளை சீரமைப்பது, உயர் மட்ட பாலம் அமைத்தல் தொடர்பாகவும், சமூக நீதித்துறையின் சார்பில் சமுதாயக்கூடம் அமைத்தல், புதிய சமூக நல மாணவ, மாணவியர் விடுதி அமைத்தல், உண்டு உறைவிடப் பள்ளி சீரமைத்தல், சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றத்துறையின் சார்பில் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் தொடர்பாகவும், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் நொய்யல் அருங்காட்சியகம் அமைத்தல் தொடர்பாகவும், உணவு, குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பில் நியாயவிலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டிடங்கள் கட்டுதல், கழிப்பறை வசதி அமைத்தல், வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்திற்கு புதிய கட்டிடம் அமைத்தல், புதிய, ஈரோடு கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம் அமைப்பது, பல்சேவை மையங்களாக மாற்றி நவீனப்படுத்தல் தொடர்பாகவும், வேளாண்மைத்துறையின் சார்பில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் அமைப்பது தொடர்பாகவும் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்கள். மேலும், மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை விரைந்து முடித்திடவும் மழைக்காலத்திற்கு முன்பாக கட்டிடப் பணிகளை முடித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

முன்னதாக, வருவாய்த்துறை அமைச்சர் மற்றும் கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் அவர்கள் ஆகியோர் பொதுப்பணித்துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை, வனத்துறை, தோட்டக்கலைத்துறை, கைத்தறித்துறை, இந்து சமய அறநிலையத்துறை, செய்தி மக்கள் தொடர்புத்துறை, நீர்வளத்துறை, நெடுஞ்சாலைத்துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆகிய துறைகளின் சார்பில் நடைபெற்று வரும் மற்றும் முடிவுற்ற திட்டப்பணிகள் தொடர்பாக விரிவாக ஆய்வு மேற்கொண்டார்கள்.

இக்கூட்டத்தின் போது ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டி. சண்முகன், பவானிசாகர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.தமிழ்செல்வி, அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் பி.ஹரிபாஸ்கர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டி.வி.கிரண் ஸ்ருதி , மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், கோபிசெட்டிபாளையம் சார் ஆட்சியர் எஸ்.சிவானந்தம் , ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், மாவட்ட வன அலுவலர் குமிலி வெங்கட அப்பால நாயுடு , துணை இயக்குநர் (சத்தியமங்கலம்) வன கோட்டம் கௌதமன் , துணை இயக்குநர் (ஆசனூர்) வன கோட்டம் யோகேஷ் குமார் கார்க், உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## Temple, mosque razed in Faridabad demolition drive to make way for RRTS corridor



A temple and a mosque were razed during an overnight demolition drive on Saturday amid intense security arrangements in Haryana's Faridabad to clear land for the upcoming Regional Rapid Transit System (RRTS) corridor, police said.

Mobile internet, dongle and bulk SMS services in NIT Faridabad and adjoining areas were also suspended for nearly 22 hours, from 12:30 am to 10 pm on Saturday, as a precautionary measure, officers added.

According to police officials, the temple and mosque were included among the structures marked for removal.

As a result, authorities decided to suspend internet and bulk SMS services, while banking and mobile recharge-related services remained unaffected.

The demolition of both religious sites was carried out after midnight under tight security arrangements, officers had earlier told HT.

The official order said mobile internet services, including 2G, 3G, 4G and 5G, along with bulk SMS and dongle services, would remain suspended within a one-kilometre radius of the notified site in the NIT Zone of Faridabad district. The restrictions were to stay in place from 12:30 am to 10 pm on May 30.

Officials said there was also a possibility of disruption to public services, damage to public property and facilities, and a breakdown of law and order in the NIT Zone of Faridabad district if internet services were misused to circulate inflammatory content and false rumours.

Faridabad police public relations officer Yashpal Yadav said traffic had been diverted to ensure commuters faced no inconvenience during the demolition work.

"Roads leading to Sainik Colony from Metro Mor via ESIC Chowk and Masjid Chowk, and another route from the DCP NIT office to Mulla Hotel and Namaste Chowk, which was earlier known as Chimani Bai Chowk, will also remain closed till 2 pm on Saturday due to the ongoing demolition drive," he said.

Plans have been drawn up for the construction of 18 metro stations along the proposed Namo Bharat corridor linking Gurugram, Faridabad and Greater Noida, officials told HT in March.

They said the proposal includes eight metro stations in Gurugram and 10 in Faridabad along the Namo Bharat route. The proposed alignment has already received approval from the Haryana government.

The 64-kilometre corridor will support both metro and RRTS services on the same track. Of the total stretch, around 52 kilometres will be located in Haryana, while the remaining 12 kilometres will be in Uttar Pradesh.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.